## Chapter – 9 Contd… - Speech for 22-January-2022

சென்ற கூடலில் நடைமுறையில் நம்மால் எந்த அளவுக்கு முழுமையைத் தர முடிகின்றதோ, அந்த அளவிற்கு வாழ்வும், பிரபஞ்சமும் நமக்கு தன் முழுமையைத் தருகிறது என்று கூறினேன். அதற்கு காரணம் - முழுமையை தேடி-அந்த ஆனந்தத்தை தேடி-வந்த முதல் சலனம் தான் சத் புருஷன். அதுவே சத்தியம். வாழ்க்கையில் அதை நடைமுறைப்படுத்த சத் புருஷன் என்பதை சத்தியத்தின் உருவம் என்று எடுத்துக் கொள்ளலாம். அதுவே நாமாக மாறி இருக்கிறோம் என்றால், அதன் பொருள் நம்முள் சத்தியத்திற்கான ஞானம் இருக்கிறது. அதை உள்ளுரை ஞானம் என்கிறோம். அதே போல அதன் எல்லையற்ற ஆற்றலும் நம்முள் இருக்கிறது.

இறைவன் ஏற்படுத்திய சலனத்தில், ஆற்றலில் அது இருப்பது போல energy and movement-யில் இருப்பது போல நாம் வெளிப்படுத்தும் செயல்களிலும் அது இருப்பதும் உண்மையே. ஆனால் அதை நாம் ஏற்பதில்லை, கவனிப்பதில்லை, செய்வதில்லை. அதற்கு அடிப்படையாக கவனிக்க வேண்டிய நான்கு சட்டங்களை சென்ற கூடலில் கூறியிருந்தேன்.

பல விஷயங்களில் எதிர்பார்த்த பலன் வராததும், சில விஷயங்களில் எதிர்பார்ப்பிற்கு மேலாக பல மடங்கு மேலாக பலன் வருவதற்கும் காரணம் இது தான். மேலும் புரிந்துக் கொள்ள சத்தியத்தை உள்ளுறை ஞானமாக கொண்டிருக்கிறோம் என்று கூறுகிறோம். நடைமுறையில் அதை எப்படி பார்ப்பது. பாத்திரம் என்று எடுத்துக் கொண்டால், டம்ளர், டவரா, சொம்பு, குடம், அண்டா, குண்டான் என்று எதைப் பார்த்தாலும், அந்த பெயர்களே மனதில், உணர்வில், நின்றாலும், நம் தேவைக்கு ஏற்ப உபயோகப்படுத்தினாலும், சற்றே கவனித்து பார்த்தால் அது ஒரு பாத்திரம் என்னும் எண்ணம் எங்கோ ஆழத்தில் இருக்கும். அந்த நினைவில் எந்த மாற்றமும் இருக்காது. அது தங்கம், பித்தளை, ஈயம், இரும்பு என்பது போன்றவற்றால் செய்யப்பட்டிருந்தாலும், அந்த வித்தியாசம் மனதில் தெரியுமே தவிர, பாத்திரம் என்னும் ஆழத்தில் அறிந்த ஞானத்தில் மாற்றம் இருக்காது.

அதையே நாம் பொய் என்பதற்கு கொண்டு வருவோம். பொய் தவறு என்பது நமக்கு தெரியும். இது யாரும் சொல்லித் தரவில்லை - சொல்லித்தர வேண்டியதில்லை. காரணம் அது நம் இருப்பின் ஆழத்தில் உள்ள ஒரு ஞானம். ஆனால் வாழ்வில் நம்மால் பொய் இல்லாமல் இருக்க முடியவில்லை. அப்படி

என்றால் இன்னும் அந்த இருப்பின் ஞானத்தை ஞாபகமாக வைத்துக் கொண்டு எந்த அளவிற்கு பொய்யை மறுத்து அது தவறு என்று சொல்லும் சத்தியத்தின் பக்கம் வருகிறோமோ - அந்த அளவிற்கு நாம் நம் முழுமையைத் தருகிறோம். வாழ்வும் தன்னை முழுமையாக தரும் .அது இறைவனின் திருவுள்ளம் Thy will ஆக இருக்கும்.

காரணம் அப்படி நாம் மாறுவது Being -யிலிருந்து Becoming ஆவது. அதாவது இறைவன் தான் மீண்டும் எதுவாக ஆக வேண்டும் என்று நினைத்தானோ, எதில் தன் ஆனந்தம் இருக்கிறது என்று நினைத்தானோ - அந்த சலனத்தை, லீலையை-செயலை- நாமே செய்வதால், நாம் படைக்கும் புது உலகம் அது. காரணம் Becoming என்பது இறைவனின் வித்து என்று ஒன்று இல்லாமல் அது நடக்க முடியாது.

அதைத் தான் நடைமுறையில் - எல்லா வரையறை உள்ளேயும் ஒரு வரையறையில்லா ஆற்றல் இருக்கிறது. All finite has infinite in it. என்று கூறப்படுகிறது. அதைத் தெரிந்து கொள்வதோடு நின்று விடாமல், அது ஏன் அப்படி இருக்கிறது எந்த நோக்கத்திற்காக அப்படி இருக்கிறது என்பது நமக்கு புரிந்தால், அதாவது its purpose and destiny புரிந்தால், முரண்பாடுக்குள் உடன்பாடு இருக்கிறது, சண்டைக்குள் சுமுகம் இருக்கிறது, கேள்விக்குள் பதில் இருக்கிறது, வெளியே இருப்பதற்குள் உள்ளே இருப்பதும் இருக்கிறது என்பது போன்றவை புரியும். இதை புரிந்துக் கொள்ள ஒரு உதாரணம்.

ஒரு மையத்திற்கு சொந்த கட்டிடம் வேண்டும் என்று ஒரு முடிவு எடுத்து பேசப்பட்ட போது நாங்கள் ஒரு நான்கு பேர் சேர்ந்து அதற்கான எங்கள் பங்களிப்பை பற்றி பேசினோம். முதலாமவர் நாம் நேரடியாக ஸ்தாபனத்திற்கு கொடுக்கலாம் இல்லை என்றால் நாம் செய்வது தெரியாது மையத் தலைவருக்கே அந்த பெருமை போகும் என்றார். இரண்டாமவர், நான் இருக்கும் நிலையில் பெரிய அளவில் எல்லாம் என்னால் தர முடியாது என் தேவை போக மீதம் இருப்பதை தருவேன் என்றார். மூன்றாமவர் அதாவது நான், தனிப்பட்ட மனிதர்களை நாம் பார்க்க தேவையில்லை கர்மயோகியை மட்டும் பார்த்து அவருக்காக இதைத் தரலாம் என்று சொன்னேன். அப்போது சென்னை சாலைகளில் ஏன் இன்றும் நிறைய இடங்களிலும் சாய்பாபா படம் வைத்து வண்டிகளை ஓட்டிக் கொண்டு தெருத்தெருவாக வந்து காணிக்கை கேட்பார்கள். நான்காமவர், இப்படி ஒரு இருபது முப்பது வண்டிகள் விட்டாவது காணிக்கைகளை collect செய்து தரவேண்டும் என்றார். எங்களுக்கு அது கேலியாகவும், கேவலமாகவும் பட்டது. ஒன்றும் சொல்லாமல் அத்தோடு பிரிந்து விட்டோம்.

சில மாதங்களில் முதலாமவர் கர்மயோகியை  விட்டு, அன்னையை விட்டு விலகினார். இரண்டாமவர்  காரணம் தெரியாமல் திடீர் மரணமடைந்தார். ஏதாவது தந்தாரா என்று தெரியவில்லை. தந்திருக்க வாய்ப்பில்லை. காரணம் அதன் பிறகு அவரை நான் பார்க்கவில்லை. மூன்றாமவனாகிய நான் கர்மயோகியிடம் கேட்டு தருவோம் என்று கேட்ட போது, அதற்கு வேறு ஒன்றை, ஒரு சேவையாக யாருக்கும் கிடைக்காத பல பிறவி புண்ணியம் அது என்று சொல்லும் அளவிற்கு ஒரு விஷயத்திற்கு அதை தரச் சொன்னார் அது அன்று முதல் 2020 ஜனவரி வரை  தொடர்ந்தது.  நான்காமவர் சில மாதங்களில் மையத்தை விட்டு, கர்மயோகியை  விட்டு விலகினார். ஆனால் அவர் பெற்ற வளர்ச்சி அபரிமிதமானது.  நான் இந்த 15 வருடத்தில் ஒரு பதினைந்து பேரை அன்னை அன்பர் ஆக ஆக்கியிருந்தால் அதிகம். ஆனால் அவர் மூலம் ஒரு ஆயிரம் பேராவது  அன்னை அன்பர்கள் ஆகியிருக்கிறார்கள்.

இன்னொன்றும் நடந்தது - ஜனவரி 2020 இல் ஒரு கணிசமான தொகையை காணிக்கையாக கர்மயோகியிடம் தந்த போது, அதை உடனடியாக அவர் அருகில் இருந்த ஒருவருக்கு - அவர் கேட்ட ஒரு உதவிக்காக தந்தார். எனக்கு அந்த நபர் மீது நல்ல அபிப்ராயம் இல்லாததால், சற்றே மனம் சுருங்கினேன். இனி பெரிய தொகையை  காணிக்கையாக தரும் போது யாரும் இல்லாத போது தர வேண்டும் என்று நினைத்தேன். அந்த மாத இறுதியில் கர்மயோகியின் உடல் நிலை சரியில்லாமல் போய் ஏப்ரலில் மறைந்தார். அதனால் அதுவே என் கடைசி காணிக்கையானது.

இதற்கான முழு விளக்கம்  சத் புருஷன் என்னும் பார்வையில்  தர முடியும் என்றாலும் அதை யார் வேண்டுமானாலும் சிந்தித்துப் புரிந்துக்  கொள்ள முடியும்  என்பதால் அதை விளக்கவில்லை.

அதன் சாரம் என்னவென்றால் நாம் நம் உடல், உணர்வு, மனம் ஆகியவற்றின் முழுமையை தருவதாக, ஆர்வம், பக்தி, செயல் என்று உயர்ந்ததை செய்வதாக நினைப்பதும் பொய்யே. நாம் எந்த அளவு சத்தியத்தின் பக்கம், உள்ளுறை ஞானத்தின் பக்கம் நிற்கிறோம் என்பதை வாழ்வு ஒவ்வொரு நிமிடமும் கவனித்துக் கொண்டே இருக்கிறது. அதற்கு ஏற்ப தன் முழுமையை அல்லது  பகுதியை மறுமொழியாக தருகிறது. அந்தப் பார்வையில் பார்த்தால் - நம் வரையறை, காலம், அளவு,  முடிவுகள் ஆகியவற்றை அந்தப் பார்வையில் ஆராய்ந்தால் - குறைந்தபட்சம் நம் அபிப்பிராயம், முன்முடிவுகள், விருப்பு, வெறுப்பு  இல்லாமல் நாம் அறிந்த உயர்ந்த

உண்மையின், சத்தியத்தின் பார்வையில் ஆராய்ந்தால், நாம் மறந்து விட்ட நம் ஞானம் எது என்று புரியும்.

நான் சொன்ன நான்கு சட்டங்களை நாம் நம் அனுபவங்களில் பொருத்திப் பார்க்க முடியவில்லை என்றால், பொதுவான சத்தியங்களான அதன் பரிணாமங்களான ஆனந்தம், அன்பு, நல்லெண்ணம், மெய்ஞானம், அறிவு, செம்மை போன்றவற்றை ஆராய்ந்தால் இவை எதற்கும் வரையறை இல்லை. இடம், மனிதர்கள், அளவு, தரம், காலம், செயல், ஆகியவை அதைப் பாதிப்பதில்லை என்பது புரியும். அது போன்ற பண்புகளை, சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் அன்னை symbol -லில் உள்ள 12 பண்புகளை, அதன் பரிமாணங்களை, நாம் கொண்டு வரும் இடம் எல்லாம், நம் அகந்தையால் நடத்தப்படும் இந்த வாழ்வில் இறைவனுக்கான சலனத்தை - Divine Movement ஏற்படுத்தும் ஒரு நிலை- இதுவும் சத் புருஷன் என்னும் நிலையே.

மனம், உணர்வு, உடல், ஆகியவை பெற்ற அறிவு, அனுபவம், மூலம் நாம் பெற்ற, கற்றுக் கொண்ட விவேகம், பாகுபாடு, அதன் மூலம் நாம் பெற்ற ஞானம், ஆகியவற்றின் மூலம் நாம் நமது அறியாமையின் முழுமையை அறிவது, நாம் நம் ஜடமான தன்மைக்கு சலனத்தை ஏற்படுத்துவதாகும். சாதாரண அகந்தை நிறைந்த மனித மன நிலையில் நாம் செய்யக்கூடியது அதுவே. ஆனால் அதுவே உணர்வால் ஆன மனிதனை , மனதால் ஆன மனிதன் என்று பார்ப்பதால், அது ஆன்மாவால் அடையாளம் காணும் முதல் நிலை. அதன் ஆற்றல் ஏற்படும் முதல் நிலை என்பதால் அது ஆன்மீக மனிதன் என்பதற்கு முன் நிலை.

அதை சத்புருஷனின் நிலை என்று கூறலாம். சமுத்திரம், ஸ்தாணு என்று இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்படும் வார்த்தைகளில், சமுத்திரத்துடன் ஒன்ற வேண்டும் என்ற நிலைக்கான உதாரணங்களை இவற்றில் எடுத்துக் கொள்ளலாம் .அதே போல ஸ்தாணு என்பதற்கு ஓடும் ரயிலில் உள்ளே நிலையாகவும் வெளியே இருப்பவை ஓடுவதாகவும் தெரிவதை உதாரணமாக சமர்ப்பணன் சென்ற கூடலில் சொன்னார். அது போல நாம் நிலையாகவும் வாழ்வு தானே ஓடுவதாகவும் நினைக்கிறோம். ஆனால் உண்மையில் நாமே ஓடுகிறோம். வாழ்வு நிலையாக இருக்கிறது. அது ஓட வேண்டுமானால் அதில் அசைவை ஏற்படுத்த வேண்டும். வாழ்வை நம்மால் அசைக்க முடிவது சத்புருஷனாவது. அதனால் தனிமனிதனாக சில பண்புகளை இறைவன் விரும்பும் பண்புகளை எடுத்துச் செய்யும் போது

வாழ்வு காலக் கெடுவை மீறி, சமூக சட்டங்களை மீறி, காலத்தை சுருக்கி அல்லது க்ஷணத்தில் நடக்கும் நிலைகள் பலவற்றை பார்த்திருக்கிறோம்

என் வாழ்வில் இருந்தே பல உதாரணங்களைக் கூறி இருக்கிறேன். நாம் உயர் சட்டங்களுக்கான முழுமையை தரும் போது வாழ்வும் தன் உயர்நிலைகளை தருகிறது. அது வாழ்வில் நாம் ஏற்படுத்தும் சலனம். ஸ்தாணு என்னும் நம்மிடம் அடுத்து வரப் போகும் வாழ்வை முன்னேற்றும் சக்திக்கான முன்நிலை.

இவற்றையெல்லாம் நம்மால் ஒன்றினால் தான் புரிந்துக்  கொள்ள முடியும். அதற்கு நாம் ஏதாவது ஒரு இறைவனின் idea -உடன் ஒன்ற வேண்டும். அதன் பிறகு அதன் நோக்கம், சித்தம், உள்ளுணர்வாக நமக்கு புரிய வேண்டும். அப்போது நாம் அதற்கு இணையாக வரமுடியும். The self that become all things சத்புருஷன் என்கிறார்.

இதற்கு நடைமுறை உதாரணமாக மனித சுபாவத்தில் அப்படி நம் வேலை செய்யும் கம்பெனி, ஸ்தாபகர், அவருடைய நோக்கம், சித்தம், புரிந்து ஒன்றினால், அந்த கம்பெனிக்கு பார்ட்னராக முடியும் அல்லது  அதற்கு இணையான கம்பெனி ஆரம்பிக்க முடியும் என்றார்.

அதை சில அன்பர்கள் செய்திருக்கிறார்கள் இந்த potential எல்லோருக்கும் இருக்கிறது. ஆனால் அது இயக்கமாக, செயலாக, மாற வேண்டும்

பெரிய Nationalized Bank-க்குகள் எனப்படுபவை ஏராளமான ரியல் எஸ்டேட் asset மற்றும்  டெபாசிட்டுகளை கொண்டவை.  நாட்டு முன்னேற்றத்திற்கு அளிக்கத் தேவையான ஏராளமான potential -ஐ கொண்டவை. ஆனால் அவை 50 வருடம் அளிக்காத  முன்னேற்றத்தை, பல தனியார் வங்கிகள், தனக்கிருந்த குறைந்த resources வைத்தே loan போன்றவரை தந்த போது நாடு பத்து வருடத்தில் பெறுகிறது.

அது போல ஆன்மாவைப் பற்றி தெரிந்தும், அதை நாம் அன்னையாக நினைத்து அவருக்கு பிடித்தவை எவை என்று தெரிந்தும், அதை செயல்படுத்தாமல் இருப்பது பேங்கின் potential போல, பூதம் காக்கும் புதையல் போல, யாருக்கும் உபயோகம் இல்லை.  அதில் ஒரு சலனத்தை, இயக்கத்தை, செயலை கொண்டு வரும்போது அது நமக்கும், நம் மூலம் பிறருக்கும் உபயோகமாகிறது.

 அந்த முடிவு நாம் தேடும் ஆனந்தத்தின் ஆரம்பம். நாமே அசைகிறோம். நாமே நிர்ணயிக்கிறோம். நாமே செயல்படுத்துகிறோம். செயல்படுத்தினோம் என்றால் நாம் ஆனந்ததிற்கான முடிவு - ரூபம் forms -ஐ பெறுகிறது. அந்த ஆனந்தம் எந்த அளவிற்கு இறைவன் விரும்பும் ஆனந்தமாக ஒன்றி இருக்கிறதோ, அந்த அளவுக்கு அதன் வடிவம், அளவு, தரம் ,ஆகியவற்றை காலத்தை சுருக்கி அல்லது காலத்தை கடந்து வெளிப்படுத்துகிறது.

இதில் எந்த அளவுக்கு நம் அக்கறை, கவனம், இருக்கிறதோ, அந்த அளவுக்கு வாழ்வும் நம் முன்னேற்றத்தில், பரிணாம முன்னேற்றத்தில், அக்கறை செலுத்தி, கவனம் செலுத்தி நடத்துகிறது.

 இது எல்லாம் நமக்கு புரியாதது அல்ல. ஆனால் இன்னும் நம்ப முடியாததற்கு காரணம் நம் பிரிவினை பார்வை.

இறைவன் உலகை படைத்தான் என்பதையும் அதன் பகுதியாக நம்மையும் படைத்தான் என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அந்த நம்பிக்கையில் நாம் வேறு, இறைவன் வேறு என்பதே அடிப்படையாக இருக்கிறது. அப்படி இல்லாமல், நம் நம்பிக்கையில் இறைவனே உலகமாக மாறியுள்ளார், அதன் பகுதியே  நாம் என்பதால், நாம் ஆகவும் அவரே இருக்கிறார் என்னும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

இப்படி நம்பினால் என்ன மாற்றம் வரும் என்று கேட்கலாம்.

 உதாரணமாக இன்று தனி மனிதனாக, சுயநலம் மிக்கவனாக இருக்கிறோம். குடும்பம் என்று இருந்தாலும் தனிக் குடும்பம், கூட்டுக்குடும்பம் என்று இருந்தாலும், அதிலும் நாம் தனித்துவத்தை தக்கவைத்துக் கொண்டே இருக்க விரும்புகிறோம். நாம் அக்குடும்பத்தின் ஒரு பகுதி என்று தெரிந்தாலும், அந்த பிரிவினை மனப்பான்மையே  நம் முன்னேற்றம், சுதந்திரம் என்று நினைக்கிறோம். ஆனால் அப்படிப்பட்டவர், நாமே குடும்பம், குடும்பமே நாம், இரண்டின் நோக்கம் சித்தம் எல்லாம் ஒன்றே என்று நினைக்க ஆரம்பித்தால், அதே குடும்பத்தின் நிலை எப்படி இருக்கும். இப்போது அதன் சந்தோஷம், சுமுகம் , சுபிக்ஷம் எப்படி இருக்கும்.  அதே போல நம்மால் இறைவனே உலகம், உலகமே இறைவன், நானே இறைவன், அவன் நோக்கமே, என் நோக்கம், அவன் சித்தமே என் சித்தம் என்று நினைக்க ஆரம்பித்தால் , இன்று உலகின் பூசல்கள், போட்டிகள், போர்கள், பிணக்குகள், விரோதம், சுயநலங்கள், அடிமைப்படுத்துதல், போன்றவை எப்படி அழியும். உலகத்தில்

சுமுகமும் ,ஆனந்தமும் ஒற்றுமையும் சுபிட்சமும் எப்படி இருக்கும். அது ஒரு தனி மனித வாழ்வில் எப்படி எதிரொலிக்கும் என்பதை சற்றே சிந்தித்துப் பார்த்தால், இந்த நம்பிக்கையின் சக்தி, அது வெளிப்படுத்தும் ஆற்றல் புரியும். அது இறை ஆர்வத்தை எப்படி தன்னைத்தானே நிறைவேற்றிக் கொள்கிறது என்பது புரியும்.

இத்தகைய ஞானத்தை பிரம்மம் சித்தித்தவர்கள் தான் பெற முடியும் என்பதை, அதாவது நானே இறைவன் என்னும் ஞானத்தை, பிரம்மம் சித்தித்தவர்கள் தான் பெற முடியும் என்று மரபு சொல்கிறது. ஆனால் கர்மயோகி பிரம்மம் சித்திக்காதவர்களும், அறிவில் புரிந்துக் கொண்டு பிரம்மத்தை கூட பிறருக்கு விளக்கலாம் என்கிறார். அதற்கு உதாரணமாக பேங்கில் வேலை செய்யும் ஒருவர் -அதாவது சம்பளத்திற்கு வேலை செய்யும் ஒருவர் - பேங்கிங் சட்டம் நடவடிக்கை பற்றி எல்லாம் நன்றாக தெரிந்த ஒருவர் - தகுதியான ஒருவருக்கு, கோடிக்கணக்கில் கடன் தர முடியும் என்பது போல, பிரம்மம் சித்தித்தவரும் விளக்க முடியாத பிரம்மத்தை சித்திக்காதவரும்,நம்பிக்கையால் புரிந்துக் கொண்டு விவரிக்கலாம். ஸ்ரீ அரவிந்தத்தை படிக்கும் அனைவருக்கும் பகவான் தரும் வரம் அது என்கிறார்.

எந்த குணமும் இல்லாத பிரம்மம் ஒரு குணத்தை ஏற்கும் போது சத்புருஷனாகிறது. அதாவது அதன் இன்னொரு பொருள், குணத்தை விட்டு விட்டால், மீண்டும் பிரம்மமாகலாம் என்பது. வாழ்வில் இறைவனுக்கு எதிரான குணங்களை, சத்தியத்திற்கு எதிரான குணங்களை விட்டு உயர் நிலைக்கான குணங்களை ஏற்றால், அது பரிணாமத்தில் முன்னேற்றம். அது மனிதனில் பகுதியான மனம் - பகுதியை விட்டு முழுமையை நாடி அடைவது. கர்மம் என்பது குணத்தால் ஏற்படுவது. சுபாவத்தால் பலிப்பது. குணத்தை விட்டு விட்டால், சுபாவம் மாறுகிறது. கர்மம் கரைந்து விடுகிறது.

உதாரணமாக வறுமை, பற்றாக்குறைக்கு காரணம் சில குணங்கள். கர்மம் அதன் மூலமே துன்பத்தை தருகிறது. அந்த குணத்தை விட்டால், அதற்கு எதிரான குணங்களை, பண்புகளை எடுத்துக் கொண்டால் கர்மம் கரைகிறது. வறுமை கரைகிறது. வருமானம் வருகிறது. ஆனந்தம் வருகிறது. அந்த அளவில் நாமே நம் வாழ்வை புதிதாக படைக்கிறோம். நம் ஜடமான வாழ்வில் சலனத்தை ஏற்படுத்தி, நாம் தேடிய ஆனந்தத்தை அடைகிறோம்.

இங்கு ஒரு சராசரியான மனிதனுக்கு சட்டம், சமூகம், அது தரும் வசதிகள், எதுவும் தெரியாது. பெறுகிறோமோ செய்கிறோமோ இல்லையோ அது இருப்பது கூட அவனுக்கு தெரியாது. ஓட்டளிக்கும் நாம் MLA-க்கும் MP-க்கும்

நின்று ஓட்டு பெறலாம் என்பதை - ஒரு செய்தி அடிப்படையில் கூட -ஒரு அறிவுக்காக கூட - தெரிந்து கொள்ள மாட்டான். அவனுக்கு தெரிந்ததெல்லாம் அவன் குடும்பமும் அது சார்ந்த சமூகம் சொன்னவை, செய்தவை, கேட்டவையே . அதை விட்டால் - அடுத்த உயர்ந்த நிலைக்கு செல்லலாம் என்றாலும் -யாராவது கூறினாலும் அதை பெரும்பாலோர் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லாமல் இருப்பார்கள். அறியாமை உள்ளவரை சமூகத்தின் விஸ்வரூபத்தை, அது நம்மை முன்னேற்ற துடிப்பதை, படிப்பு, வசதி, பாதுகாப்பு, சுதந்திரம், என்று தேடி வந்து தருவதை அவனால் காண முடியாது. அது போல நம் அகந்தையின் பிடியில் அபிப்பிராயம், முன்முடிவுகள், விருப்புகள் ஆகியவற்றின் பிடியில் இருக்கும் வரை, சமுத்திரம், ஸ்தாணு போன்றவை நமக்கு புரியாது. அவற்றிடம் நம்மை ஒப்படைக்க முடியாது.

அறியாமை சமூகத்தின் முழுமையை காண முடியாமல் கண்ணை மறைப்பது போல. நம் அகந்தையின் பரிமாணங்கள், அபிப்ராயங்கள், அதை ஒட்டிய பிடிவாதங்கள், நம்மை ஆன்மீக உண்மைகளை காண முடியாமல் தடுக்கிறது. அதை விளக்க ஏற்பட்ட ஸ்தாபனம் தான் அன்னை. அதுவே சமுத்திரம். அந்த சமுத்திரம் ஏன் ஏற்பட்டது என்னும் போது இந்த அத்தியாயத்தில் முக்கிய Theme-மான நமக்கு இறைவன் தேவை என்பது போல, இறைவனுக்கும் நாம் தேவை என்பது வருகிறது. உதாரணமாக Microsoft -இல் Bill Gates-இடம் லட்ஷக்கணக்கானோர் வேலை செய்கிறார்கள். இவர்கள் இல்லாமல் Microsoft இல்லை. அதே போல Microsoft என்று ஒன்று இல்லையென்றால் இத்தனை லட்சம் பேரின் வேலை, நோக்கம், ஆர்வம் வேறு எங்கு செல்ல முடியும். இதே போன்ற இன்னொருவரிடமே செல்ல முடியும். அதுவும், முதலாளி, தொழிலாளி, முதலாளி என்னும் வட்டமே. இப்படி ஏராளமான கம்பெனிகள் இருக்கின்றன. இவர்களிடம் சேரும் அபிரிமிதமான பணம் பிறரையும் அடைய வேண்டுமென்றால் அதை charity போன்ற organization -இல் சேர்ந்து பின் அது மீண்டும் பலருக்கும் பிரித்து அளிக்கப்படுகிறது. அது ஒரு ஸ்தாபனம். அதுவே organised ஆக இருக்கும் போது Bank என்றாகிறது. பலரின் லாபங்களை ஒன்று சேர்த்து deposit ஆக பெற்று பலருக்கும் கொடுத்து முன்னேற்றுவது அதன் வேலை. இதுவும் ஸ்தாபனமே . இவ்விரண்டின் மூலமும் பல Bill Gates உருவாகலாம். அது போல பிரம்மமாக உள்ள இறைவனுக்கு வேலை, சேவை செய்வதாக நினைத்து செய்பவர்களுக்கு அதை எளிமையாக்க, உதவ, அவர்களை பிரம்மமாக்க பகவான் படைத்த ஸ்தாபனம் அன்னை.

அந்த ஸ்தாபனம் தம்மை சுருக்கி நம்முள் வந்திருக்கிறது. எது தெரிய வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும், அதனிடம் கேட்டால் போதும் தெரிந்து கொள்ளும் திறமை வந்துவிடும். அதுவே நம்மை அன்னை என்னும் சமுத்திரத்திடம் ஒப்படைப்பது. அது அனைத்து சக்திகளை உள்ளடக்கிய சமுத்திரம். இடையறாத ஆன்மீக வாய்ப்புகள் அதன் அலைகள். நம் இஷ்டத்திற்கு செல்லாமல் அதன் இஷ்டத்திற்கு செல்வதே ஞானம். அதுவே சமர்ப்பணமான வாழ்க்கை. அதுவே சரணாகதி.

சேவை ஸ்தாபனங்கள் சமுதாயத்திற்கு தேவையான கல்வி ,மருத்துவம் போன்றவற்றை தந்து சமுதாயத்தை முன்னேற்றுகிறது. அதையே தான் நாடும், அரசாங்கமும் செய்கிறது. தன்னை, அதாவது சமுதாயம் அதன் அங்கமான தனி மனிதனுக்கு தன்னை முழுமையாக தர விரும்புகிறது. ஓட்டுரிமை அதன் அடிப்படை. அதை போட்டுவிட்டு வேறெதுவும் நடப்பது தெரியாமல் இருக்கிறோம். அதே போல அன்னைக்குப் பிரார்த்தனை செய்கிறோம். நடக்கிறது. அதோடு விட்டு விடுகிறோம். ஒவ்வொரு நிறைவேறிய பிரார்த்தனையிலும் அன்னை தன்னை முழுமையாக தந்திருப்பது தெரியும். அதை முழுதுமாக புரிந்து அவருடன் ஒன்றினால் நாமே அன்னையாகலாம் என்னும் அளவிற்கு ஞானம் வரும்.

இன்று உலகத்தில் வாய்ப்புகள் ஞானம் ஆகியவற்றை தர ஒரு ஸ்தாபனம் இல்லை. அன்னை அதை தரும் ஸ்தாபனம். ஞானத்தைத் தந்து, வாய்ப்பைத் தந்து, இல்லாத திறமையை உருவாக்கும் ஸ்தாபனம் அது. என் வாழ்வில் எத்தனை திறமைகளை தந்திருக்கிறார். எவ்வளவு வாய்ப்பை உருவாக்கி இருக்கிறார். எவ்வளவு ஞானத்தை தரத் தயாராக இருந்திருக்கிறார் என்பது நன்றாகவே தெரிகிறது, என்றாலும் நான் அதில் 1% கூட பெறவில்லை என்பதும் தெரிகிறது. நம் ஆர்வம் அவரை வரவழைக்கிறது. அது போல அவர் ஆர்வத்திற்கு நோக்கத்திற்கு நாம் தேவை, பரிணாமம் வளர, சத்திய ஜீவ சக்தி பரவ நாம் அவருக்கு தேவை.

எவ்வளவு ஆர்ப்பாட்டமான கலவரமான இடமாக இருந்தாலும் ஒரு போலீஸின் விசில் சத்தம் அதை அடக்கிவிடும். அதன் பொருள் நம்மை பாதுகாக்கும் அரசாங்கம், சட்டம் ஆகியவற்றின் மொத்த சக்தியும் அந்த விசிலில் வெளிப்படுகிறது. அது போல பரிணாமத்தில் வளர நாம் செய்யும் செயல் அனைத்துமே அன்னையை நமக்கு முழுவதுமாக தரக்கூடியது.

அதனால் நம்மை முழுமையாக அவருக்கு தருவதே நாம் அவருக்கு செய்யும் சேவை. அது அன்னை என்னும் சமுத்திரத்திடம் நம்மை ஒப்படைப்பது.

தன்னை உணர தேவை இல்லாத நிலைக்கு மனிதன் வரும் போது அந்த நிலை சத்புருஷனின் நிலை என்கிறார். அன்னைக்கு நம்மை தரும் நிலை எதையும் சிந்திக்க, உணர, செய்ய தேவையற்ற நிலை என்பதால் நாமும் சத்புருஷனே.

ஒன்றை இரண்டாக எதிரெதிரான அம்சங்களாக பிரித்து அவை இணைந்து உயர்ந்த பூரணத்தை அடைவது இயற்கையின் பெறு நெறி . அது இந்த அத்தியாயத்திற்கு அடிப்படை என்கிறார் கர்மயோகி. அதன் எந்த ஒரு விஷயத்திலும் இருக்கும் இயக்கமும் ஆற்றலும் ஒரு உயர்ந்ததை நோக்கி செல்லும் தூய இருப்பு என்பதே உண்மை என்கிறார். இதை சத் புருஷன் பரிணாமம் என்னும் வேலையில் ஈடுபட்டு இருக்கிறான். அவன் ஞானத்தை தரத் தயாராக இருக்கிறான் என்று பிரித்துப் பார்த்தாலும் சரி, நமக்கு பிரம்மம் - நாமே, நாமே பிரம்மம், என்று நினைத்தாலும் சரி, அதன் பொருள் நம் வாழ்வை நாமே படைக்கும் ஆற்றல் நமக்கு உள்ளது என்பதே. நமக்கு அக்கறை உள்ள அளவு நாம் சாதிக்கிறோம். நாம் பிரம்மத்தின் சட்டங்களை வெளிப்படுத்தும் அளவிற்கு சாதிக்கிறோம். சிந்தனையால் பகுத்தறிந்து, தர்க்கரீதியாக சரி என்று நினைத்ததை செயல்படுத்துவது நம் உறுதி. செயல்படுத்தும் அளவுக்கு அது வடிவம், தரம், அளவு, காலம் சூழலைப் பெறுகிறது. அப்போது பலனை நாடும் லட்சியத்தை கடந்த - பண்பை நாடும் ஆர்வம். அது நம்மை சத்புருஷனாக்கும்.

மற்ற படி காலம் ,அகம், புறம் போன்றவற்றைப் பற்றி எதிர் வரும் அத்தியாயங்களில் விளக்கமாக பார்க்க இருப்பதால் இங்கு அதை விளக்க முயலவில்லை. என்னை பொருத்தவரை இந்த அத்தியாயம் இத்துடன் முடிகிறது. அடுத்த கூடலில் அடுத்த அத்தியாயத்தை பார்ப்போம்.